10-01-2014 Dinathanthi



சென்னையில் கிண்டி–அசோக்பில்லர் இடையே அமைக்கப்பட்டுள்ள மெட்ரோ ரெயில் பாதையில் மே அல்லது ஜூன் மாதம் ரெயில் சேவை தொடங்க இருக்கிறது. இதையொட்டி ரெயில் மின்கம்பங்கள் போர்க்கால அடிப்படையில் அமைக்கப்பட்டு வருகின்றன.

# கோயம்பேடு–ஆலந்தூர் இடையே மெட்ரோ ரெயில் சோதனை ஓட்டம்

## இம்மாத இறுதியில் நடத்த திட்டம்

சென்னை, ஜன.10– கோயம்பேடு–ஆலந்தூர் இடையே ரெயில் சோதனை ஓட்டம் இம்மாத இறுதியில் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது:–

### திட்டமிட்ட பணி

திட்டமிட்டபடி இந்த ஆண்டு மே அல்லது ஜூன் மாதத்திற்குள் கோயம்பேடு–ஆலந்தூர் இடையே ரெயில் போக்குவரத்து தொடங்க திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்கு தேவையான அனைத்து ரெயில்களும் மார்ச் மாதத்திற்குள் பிரேசில் நாட்டில் இருந்து கப்பல் மூலம் சென்னைக்கு கொண்டுவரப்பட உள்ளன.

கோயம்பேட்டில் இருந்து ஆலந்தூருக்கு இம்மாதம் இறுதியில் சோதனை ஓட்டம் நடத்த திட்டமிடப்பட்டு உள்ளது. கோயம்பேட்டில் உள்ள கட்டுப்பாட்டு அறையிலிருந்து முதலாவது சோதனை ஓட்ட ரெயில் இயக்கப்பட உள்ளது. இடையில் உள்ள 7 ரெயில் நிலையங்களிலும் ரெயில் நின்று செல்வது, சிக்னல்கள் செயல்பாடுகள் குறித்தும் சோதனை செய்யப்பட இருக்கிறது.

### ஓடுபாதை அருகே சுரங்கம்

விமானநிலையம் அருகில் உயர்த்தப்பட்ட ரெயில்பாதை அமைக்க முடியாது என்பதால், விமானநிலைய ரெயில் நிலையத்திலிருந்து மீனம்பாக்கம் ரெயில் நிலையம் வரை விமான நிலையத்தின் ஓடுபாதை அருகில் தரையில் ஒரு கிலோ மீட்டர் நீளத்திற்கு 10 மீட்டர் ஆழத்தில் குழி தோண்டி சுரங்கம் போன்ற வகையில் ரெயில் பாதை அமைக்கப்பட உள்ளது.

இதற்கான பணியை மேற்கொண்ட ஒப்பந்தகாரர் பணியை முடித்து தராததால் தற்போது மும்பையை சேர்ந்த மற்றொரு ஒப்பந்தகாரருக்கு ரூ.64.86 கோடி மதிப்பிலான பணி பிரித்து தரப்பட்டு உள்ளது. விரைவில் இந்தப்பணி தொடங்கவிருக்கிறது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.